# சாதாரணக் கூட்டப்பொருள்

2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

இம்மாநகராட்சிக்கு வரும் குடிநீர் 1வது பைப் லைன் மெயினில் புதுக்கோட்டை ஊராட்சிப் பகுதியில் 2.00 கி.மீ நீளத்திற்கு 400 எம் எம் கே.எஸ்.சி. பி.எஸ்.சி, பைப் லைன் அமைக்கும் பணி உள் கட்டமைப்பு ஈடு செய்யும் நிதி திட்டத்தின் கீழ் செய்ய 24–6–2009ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மானம் எண் 47 நாள் 20–2–2007இல் ரூ.50.00 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு ஜி பார்த்தீபன், ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டிற்கு ரூ 4.99% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு:** மேற்படி பணிக்கு மூன்றாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு எந்தவித ஒப்பந்தப்புள்ளியும்பெறப்படவில்லை, மேலும் நான்காவது அழைப்பில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே வரப் பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4. 99 % அதிகமாகவும், பொறியாளர் கையேடு பக்கம் 9 பத்தி எண் 2–7–2இல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் 5% க்கு குறைவாக உள்ளதாலும் மதிப்பீட்டை விட 4.99 % கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம். குடிநீர்த்திட்ட பணியாக இருப்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுக்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ம.ப.எண் 14/2009–2010

**தீர்மானம் எண்: 136**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. இம்மாநகராட்சி டேவிஸ்புரம் ரோட்டில் கால்நடை மருத்துவ மனை கிளை நிலையம் அமைக்கும் பணி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாடு திட்டம் 2008–2009ன் கீழ் செய்ய 10–6–2009ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 1551/2008 நாள் 16–2–2008இல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு எஸ். இன்னாசிமுத்து, ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டிற்கு ரூ 3.78% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு ரூ 5.11% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு எஸ்.இன்னாசிமுத்து அவர்கள் மதிப்பீட்டை விட 3. 78 % அதிகமாக கொடுத்துள்ளார். இப்பணி திட்ட பணியாக இருப்பதால் அவசர அவசியம் கருதி பொறியர் கையேடு பக்கம் எண் 9 பத்தி எண் 2.7.2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிக விலை விகிதம் 5% சதவீதத்திற்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட 3.78% சதவீதம் மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

ம.ப.எண். 5/2009–2010

**<u>தீர்மானம் எண்: 137</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

3. இம்மாநகராட்சி டுவிபுரம் சங்கரன் பிள்ளை பூங்கா வளாகத்தில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாடு திட்டம் 2008–2009ன் கீழ் செய்ய 10–6–2009ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 1551/2008 நாள் 16–2–2008இல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு எஸ். இன்னாசிமுத்து, ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டிற்கு ரூ 3.90% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு ரூ 4.39% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு எஸ்.இன்னாசிமுத்து அவர்கள் மதிப்பீட்டை விட 3. 90% அதிகமாக கொடுத்துள்ளார். பணியின் அவசர அவசியம் கருதி பொறியர் கையேடு பக்கம் எண் 9த்தி எண் 2.7.2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகமாக விலை விகிதம் 5% சதவீதத்திற்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட 3.90% சதவீதம் மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

ம.ப.எண். 6/2009–2010

**<u>தீர்மானம் எண்: 138</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

4. தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சத்திரம் தெருவில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் மருந்தகத்திற்கு தேவையான மருந்துகள், மாத்திரைகள் ஆகியவைகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் வாங்கவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.35000/– செலவில் மருந்து பொருட்களை பெற்றுத் தருமாறு சத்திரம் தெரு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருந்தக மருத்துவ அலுவலர் தனது 19.06.2009ஆம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார். மேலும் மருந்து பட்டியலும் இணைத்துள்ளார்.

அன்னார் சமர்ப்பித்துள்ள மருந்து பட்டியலில் உள்ள மருந்து பொருட்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் வாங்கவும், அதற்கான செலவுத் தொகை ரூ.35000/—ஐ வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

சி4/10095/09

**தீர்மானம் எண்: 139**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

5. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவ கல்லூரியில் பணிபுரியும் 1) திரு எஸ்.சேகர், இளநிலை உதவியாளர், 2) திருமதி பி.மலர்விழி சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய இருவரும் தாங்கள் (உடல் ஊனமுற்றோர்) மாற்று திறன் உடையவர்கள் என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில்வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்து உள்ளனர்.

தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டவிதி 169H(c) ன்படி மேற்படி பணியாளர்கள் இருவருக்கும் 2009—10, I-ம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:** அனுமதிக்கலாம்.

அ10/2468/09

**தீர்மானம் எண்: 140**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

6. இம்மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் உள்ள IUDP வணிக வளாகத்தில் 1வது தளத்தின் மேல்புறம் சின்னமணி பைனான்ஸ் நிறுவனம் இயங்கி வந்த அறைக்குரிய வாடகை நிலுவை ரூ.305056/— (ஜனவரி 2008) முடிய செலுத்தாததால் பூட்டி சீல் வைத்து அதன் உரிமத்தை ரத்து செய்ய 12.06.09இல் வருவாய் ஆய்வர் அறிக்கை செய்துள்ளார்.

எனவே மேற்படி அறிக்கையின்படி மேற்படி அறையின் உரிமத்தினை ரத்து செய்து மறு ஏலம் விடவும் மற்றும் வாடகை நிலுவை ரூ.305056/—க்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும், அது வகைக்குரிய செலவு தொகையை பொது நிதியில் செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16/9676/2007

**தீர்மானம் எண்: 141**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் திரு ஏ.முகமது உஸ்மான் என்பவர் மாநகராட்சி பணிக்காக செலுத்தப்பட்ட முன் வைப்புத்தொகை திரும்ப வழங்க கேட்டுள்ளார். அன்னார் செலுத்திய வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. எனவே அத்தொகை ரூ.8750/—ஐ திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

பி3/10302/09

**தீர்மானம் எண்: 142**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

8. இம்மாநகராட்சியின் வருடாந்திர குத்தகை இனங்களில் கீழ்குறிப்பிட்ட மூன்று விளம்பர இனங்களுக்கு 2009–10ஆம் ஆண்டுக்குரிய உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

முதுநிலை நகரமைப்பு அலுவலரின் 01.07.2009ம் தேதிய குறிப்பில் உள்ளாட்சி விளம்பர உரிமம் மற்றும் வரி வசூலித்தல் விதி 2003 (அரசாணை எண் 47 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள் 26.06.03இன்படி விதி எண் 3இல் அனைத்து வகையான விளம்பரங்களுக்கும் உரிமம் வழங்குவது விளம்பர உரிமம் கட்டணம் மற்றும் விளம்பர வரி வசூல் செய்வது தொடர்பாக அதிகாரம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விளம்பர இனங்கள்**

| வ. எண் | விபரம் |
|---|---|
| 1. | மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ள இடங்களில் 15 விளம்பர பலகை அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் |
| 2. | மாநகராட்சிக்கு சொந்தமான 7 கட்டிடங்களில் விளம்பரம் எழுதிக் கொள்ளும் உரிமம் |
| 3. | மாநகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தில் உள்ள 5 இடங்களில் விளம்பரம் செய்யும் உரிமம் |

எனவே முதுநிலை நகரமைப்பு அலுவலரின் குறிப்பின்படி விளம்பர உரிமம் வழங்குவது குறித்து தனியே சட்டம் மற்றும் விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள 3 இனங்களின் உரிமத்தினை ரத்து செய்யவும் உரிமதாரர் செலுத்தியுள்ள உரிமத் தொகையில் உரிமம் ரத்து செய்யும் காலம் உள்ள உரிமத் தொகையை கழித்து மீதி தொகையை வழங்கவும் மற்றும் மேற்படி மூன்று இனத்தை ஏல இனத்தில் இருந்து நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16/1059/2009

**தீர்மானம் எண்: 143**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

9. இம்மாநகராட்சி வருடாந்திர குத்தகை இனமான மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள 5 இடங்களில் விளம்பரம் செய்யும் உரிமம், மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ள 15 இடங்களில் விளம்பர உரிமம் மற்றும் மாநகராட்சி 7 கட்டிடங்களில் விளம்பரம் செய்யும் உரிமம் ஆகிய 3 இனங்கள் உரிமம் பெற்ற திரு ஆர்.சின்னதம்பி என்பவர் மாவட்ட உரிமை நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் O.S.233/2009இல் மாநகராட்சி சார்பாக ஆஜராக மாமன்ற வழக்கறிஞர் திரு N.செல்வராஜ் அவர்களை நியமனம் செய்யவும் அது வகைக்குரிய செலவுத் தொகையை செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16/1059/2009

**தீர்மானம் எண்: 144**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10. இம்மாநகராட்சி பாளை ரோடு வணிக வளாக கடை எண் 10ஐ உரிமம் பெற்ற திரு சகாயராஜ் என்பவர் வாடகை நிலுவை ரூ.236649/–ஐ செலுத்தக் கோரி இவ்வலுவலகம் மூலம் அனுப்பப்பட்ட

அறிவிப்பு திரும்ப வரப்பெற்றதின் பேரில் மேற்படி அறிவிப்பை தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்குரிய செலவுத் தொகை ரூ.600/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16/7034/2002

**<u>தீர்மானம் எண்: 145</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

11. இம்மாநகராட்சிப் பகுதி போல்பேட்டை எஸ்.கே.எஸ்.ஆர். காலனியில் சர்வே வார்டு பி, பிளாக் எண் 7, நகரளவு எண் 8, முனிசிபல் பார்க்கிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி மூலம் அப்புறப்படுத்தியதை ஆட்சேபித்து திரு எஸ்.தங்கமாரியப்பன் மற்றும் திருமதி ஆறுமுகக்கனி ஆகியோர் மதுரை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு எண் 4490/09 மற்றும் 4503/09 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கில் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1/3474/09

**<u>தீர்மானம் எண்: 146</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

12. தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண் 4, இன்னாசியார்புரம் கதவு எண் 46ல் இயங்கி வரும் சிறுமலர் குருமடத்திற்கு சொத்துவரி விலக்கு அளிக்க மேற்படி குருமட அருட் பணியாளர் திரு கிருபாகரன் அவர்கள் கோரியுள்ளார்.

வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் உதவியாளர் நேரடியாக ஆய்வு செய்து மேற்படி கட்டிடம் புரோகுரேட்டர் தூத்துக்குடி டயோசிசன்–க்கு சொந்தமானது எனவும், மேற்படி கட்டிடத்தில் சிறுமலர் மத போதகர் பயிற்சி ஸ்தலம் மற்றும் வழிபாட்டு ஸ்தலமாக உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்றும் தெரிவித்து உள்ளார்கள்.

எனவே மேற்படி கட்டிடம் வழிபாட்டு தலமாக இருந்து வருவதால் மேற்படி கட்டிடத்திற்கு மாநகராட்சிக்குட்பட்ட கோவை மாநகராட்சி சட்டவிதி எண் 123(a)ன்படி சொத்துவரி விலக்கு அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ2/13770/08

**<u>தீர்மானம் எண்: 147</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

13. இம்மாநகராட்சிக்கு சொந்தமான ரோச் பூங்கா நல்ல முறையில் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல், அதில் வாகன நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் மற்றும் தற்காலிக கடை அமைத்து அதில் வாடகை வசூலித்துக் கொள்ளும் உரிமைக்கு 06.07.2009ம் தேதி நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு நபர்கள் மட்டும் பொது ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

1) திரு ஜே.வி. அசோகன், த/பெ. ஜேம்ஸ் விக்டர்

|  |  |  |  |
|---|---|---|---|
|  | 39, பாஸ்கர்தாஸ் நகர்1,<br>திடீர் நகர், மதுரை. | – | ரூ. 82000/–<br>(வருடத்திற்கு) |
| 2) | திரு இ.பாஸ்கர், த/பெ. டி.எபனேசர்,<br>39டி/1ஏ/6, வண்ணார் 3ம் தெரு,<br>தூத்துக்குடி | – | ரூ. 85000/–<br>(வருடத்திற்கு) |

மேற்படி கேட்கப்பட்ட இரண்டு கேள்வியில் உயர்ந்த கேள்வியாக திரு இ.பாஸ்கர் என்பவரின் கேள்வி தொகை ரூ.85000/–க்கு உரிமம் வழங்குவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மேற்படி இனத்திற்கு உயர்ந்த ஏலக் கேள்வியாக திரு இ.பாஸ்கர் என்பவரின் கேள்வித் தொகை ரூ.85000/– (வருடத்திற்கு) கடந்த ஆண்டு உரிமத் தொகை ரூ.36700/–ஐ விட ரூ.48300/– கூடுதலாக உள்ளது. எனவே திரு கே.பாஸ்கர் என்பவரின் உச்ச கேள்வி தொகை ரூ.85000/– அடிப்படையில் (வருடத்திற்கு) மூன்று ஆண்டுகள் உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/11087/09

**<u>தீர்மானம் எண்: 148</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14. இம்மாநகராட்சியின் சி.வ. தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணியாற்றி பணியிலிருந்து 31.7.2008ல் ஓய்வு பெற்ற திருமதி நா. லலிதா என்பவர் தமது பணிக்காலத்தில் நகராட்சியில் அன்னாரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2640/– மற்றும் அதற்கான வட்டித் தொகை ரூ 1572/ –ஆக மொத்தம் ரூ 4212/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – திருமதி. நா.லலிதா, ஓய்வு பெற்ற தலைமையாசிரியருக்கு ரூ 4212/–ஐ கல்வி நிதியிலிருந்துவழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

சி1/13610/09

**<u>தீர்மானம் எண்: 149</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

15. இம்மாநகராட்சி தெரு விளக்கு பராமரிப்பில் துறைமூலம் 16 வார்டுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது

|  |  |
|---|---|
| 40 வார்ட்ஸ் குழல் விளக்குகள் | 2057 |
| சோடியம் ஆவி விளக்குகள் | 209 |
| உயர்மின்கோபுர விளக்குகள் | 8 |

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்படி மின்சாதனப் பொருட்கள் ஒரு ஆண்டு பராமரிப்பிற்கு செலவினம் ரூ 12.00 இலட்சம் ஆகும். இதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

35 வார்டுகள் தனியார் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றது. இதன் விவரம் வருமாறு

|  |  |
|---|---|
| 40 வார்ட்ஸ் குழல் விளக்குகள் | 4601 |

| | | |
|---|---|---|
| 250 | வா'ர்ட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 800 |
| 150 | வார்ட்ஸ் மெர்க்குரி ஆவி விளக்குகள் | 74 |
| | உயர் மின் கோபுர விளக்குகள் | 2 |

மொத்தம் 5477 மேலும் நடப்பாண்டில் மேற்படி பகுதிகளில் திட்டப்பணிகள் மூலம் புதியதாக பொருத்தப்பட்டு உள்ள குழல் விளக்குகள் எண்ணிக்கை 80 ஆகும். இதனையும் சேர்த்து ஓராண்டு கால பராமரிப்பு தொகை ரூ 28 இலட்சம் ஆகும் (17–09–09 முதல் 16–09–2010) இதற்கான செலவினத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. ஒப்பந்தப்புள்ளி கோரி மாமன்ற அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொள்ள சிறிது கால அவகாசம் தேவைப்படும். நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளபடி தற்போது பராமரிப்பு பணிகள் செய்து வரும் மெசர்ஸ் சுதா இன்ஜினியரிங் நிறுவனத்தின் மூலம் மன்ற தீர்மானம் எண் 1015 நாள் 14.9–2006ல் அனுமதிக்கப்பட்டு உள்ளபடி பராமரித்துக்கொள்ள அனுமதி வேண்டப்படுகின்றது. புதியதாக பொருத்தப்பட்டு உள்ள உயர்மின்கோபுர விளக்குகள் மற்றும் ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் திட்டங்களில் பொருத்தப்படும் விளக்குகள் உத்திரவாத காலம் முடிந்த பின் தனியார் மூலம் பராமரித்துக்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு –**

1) துறை மூலம் பராமரிக்கப்பட்டு வரும் பகுதிகளுக்கான செலவினம் ரூ 12.00 இலட்சத்திற்கும், மேல் நடவடிக்கை தொடரவும் அனுமதிக்கலாம்

2) தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் பகுதிகளுக்கான செலவினம் ரூ 28.00 இலட்சத்திற்கும் நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் வழிகாட்டு நெறிமுறைகள் படி மேல் நடவடிக்கை தொடரவும் அனுமதிக்கலாம்

3) மேற்படி பகுதிகளில் தற்போது பராமரிப்பு பணிகள் செய்து வரும் மெசர்ஸ் சுதா இஞ்சினியரிங், திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

4) புதியதாக பொருத்தப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்குகள் மற்றும் பொருத்தப்படவேண்டிய விளக்குகள் உத்திரவாதக் காலம் முடிந்தபின் தனியார் மூலம் பராமரித்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

இ3/13706/09

**<u>தீர்மானம் எண்: 150</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2, 3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது

16. இம்மாநகராட்சி வருடாந்திர குத்தகை இன எண் 10 புதிய பேருந்து நிலைய நுழைவு வாயில் அருகாமையில் உள்ள கட்டண கழிப்பறை உள்ள இடத்தில் மேம்பால அணுகுசாலை வர உள்ளதால் அதனை ஏல இனத்தில் இருந்து நீக்கம் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண் 44 நாள் 20–02–2009இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி காலதாமதம் ஏற்பட்டதால் மேற்படி இனத்திற்கு 30–06.2009 முடிய உள்ள காலத்திற்கு உரிமம் நீடித்து உரிமத் தொகை பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்படி இடம் மேம்பாலத்தின் அணுகு சாலைக்கு இடம் தேவைப்படுவதால் 06–06–2009இல் இடிக்கப்பட்டதாக இளநிலை பொறியாளர் அறிக்கை செய்துள்ளார்.

எனவே மேற்படி இனத்தினை உரிமம் பெற்ற திரு டி. மகாராஜன் என்பவருக்கு அன்னார் ஜுன் மாதம் செலுத்திய உரிமத்தொகை ரூ 11000/–இல் 6–6–2009 முடிய உள்ள காலத்திற்குரிய தொகை ரூ.2200/– ஐ கழித்துமீதம் உள்ள ரூ 8800/–ஐ திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/1059/2009

**<u>தீர்மானம் எண்: 151</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

17. தூத்துக்குடி மாநகராட்சி பழைய பேருந்து நிலைய IUDP வணிகவளாக 1வது தளத்தின் மேல்புறம் உள்ள அறைக்கு 14–07–2009ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏல முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி | வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ரா. சண்முகசுந்தரவேல்<br>1/120இ, அந்தோணியார்புரம்<br>கோரம்பள்ளம்,தூத்துக்குடி | ரூ 7400 (மாத வாடகை) |
| 2 | திரு எஸ்.டி. பொன்சீலன்<br>106ஜே/29/2 மில்லர்புரம் 1வது தெரு<br>தூத்துக்குடி | ரூ 7500/– (மாத வாடகை) |

**அலுவலகக் குறிப்பு**

பழைய பேருந்து நிலைய IUDP வணிகவளாக 1வது தளத்தின் மேல்புறம் உள்ள அறைக்கு திரு எஸ் .டி. பொன்சீலன் என்பவர் கொடுத்துள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ 7500/– முந்தய மாத வாடகை ரூ 6985/–ஐ விட ரூ 515/–விட கூடுதலாக உள்ளது. எனவே பழைய பேருந்து நிலைய IUDP வணிக வளாக 1வது தளத்தின் மேல்புறம் உள்ள அறைக்கு திரு எஸ்.டி,பொன்சீலன் என்பவர் கொடுத்துள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ 7500/–க்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/12119/09

**<u>தீர்மானம் எண்: 152</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18 இம்மாநகராட்சிப் பகுதி பக்கிள் ஓடைப் பகுதியில் உள்ள வடக்கு பீச் ரோடு (அண்ணா காலனி) பகுதியில் பழைய க.எண். 165/23 புதிய எண் 165/x/9 இல் குடியிருந்துவரும் திருமதி சாந்தி க/பெ பாஸ்டர் ஜெயராஜ் என்பவர் தான் மேற்படி பகுதியில் 36 வருட காலமாக குடியிருந்து வருவதாகவும் மாநகராட்சிக்கு வீட்டு தீர்வை செலுத்தி வருவதாகவும் எனவே மேற்படி இடத்திலிருந்து தங்களை அப்புறப்படுத்தக்கூடாது என தெரிவித்து மாநகராட்சியினை எதிர்த்து தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் I.A. 714/09 in O.S.235/09 வழக்கினை தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு முடியும் வரை மேற்படி பரிகாரத்திற்கு ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்குமாறு வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் வாதிக்கு சார்பாக உறுத்துக்கட்டளை எதுவும் வழங்கிடாமல் இருக்க Caveat பெறுவதற்கும், மேற்படி வழக்கில் மாமன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

எப். 12365/09

**<u>தீர்மானம் எண்: 153</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

19. இம்மாநகராட்சி மாடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு 14–07–09ம் தேதி நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1) திருமதி வ. ஸ்ரீதேவி
18/1 செல்வீஜர் 1ம் தெரு,
தூத்துக்குடி — ரூ. 81012/– வருடத்திற்கு
2) திரு சே. குப்புசாமி
35 எ. மேலரதவீதி, தூத்துக்குடி. — ரூ. 75510/– வருடத்திற்கு

**அலுவலகக் குறிப்பு**

உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி ஸ்ரீ தேவி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 81012/– (வருடத்திற்கு) முந்தய வருட ஏலத்தொகை ரூ 158000/– விட ரூ 76988/– குறைவாக உள்ளதால் மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/3129/2009

**<u>தீர்மானம் எண்: 154</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

20. இம்மாநகராட்சி பகுதிகளான போல்டன்புரம், சுப்பையாமுதலியாளர்புரம் மற்றும் அரசு பொது மருத்துவமனை பகுதிகளில் மழை காலங்களில் வடிகாலின்றி பொதுமக்களுக்கு இடையூராக தேங்கி நிற்கும் மழைநீர் வடிந்து செல்ல இம்மாமன்ற தீர்மான எண். 244 நாள் 30–12–2008ன் படி உரிய ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ரூ. 4000000/–(நாற்பது இலட்சம் )மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் மழைநீர் வடிகால் பணியால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட உள்ளதாக தெரிவித்து மேற்படி பணியினை நிறுத்த தடை உத்திரவு பிறப்பிக்க கோரி திரு. அதிசயக்குமார் என்பவர் சென்னை, உயர்நீதிமன்றக் கிளை மதுரை உயர்நீதிமன்றத்தில் W.P. (MD).No. 7671/2009 என்ற வழக்கு எண்ணில் இம்மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் இம்மாநகராட்சி தரப்பில் ஆஜராக இம்மாமன்ற உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. எஸ். கடற்கரை, பி.எஸ்ஸி. பி.எல். அவர்களிடம் இவ்வழக்கு ஒப்படைக்கப்பட்டது. தடை உத்திரவு கோரிய பொருள் தொடர்பான பணிகள் முடிவு பெறுகின்ற நிலையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இவ்வழக்கில் தடை உத்திரவு ஏதும் பிறப்பிக்கப்படாமல் இருக்க தனது மூத்த வழக்கறிஞர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்களின் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாட வேண்டிய நிலை உள்ளதாகவும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– வழங்கவும் கோரியுள்ளார். ஏனவே மிக முக்கியமான வழக்கு என்பதாலும் இம்மாமன்றத் தீர்மானத்தின்படி ரூ. 4000000/– (நாற்பது இலட்சம்) மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டட பணி தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் நீதிமன்றம் மூலம்தடை உத்திரவு ஏதும் பிறப்பிக்கப்படாமல் இருக்க இவ்வழக்கின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– வழங்க கேட்டுள்ளதை அனுமதித்தும், மேலும் இவ்வழக்கு தொடர்பாக ஏற்படும் இதர செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– வழங்கியதை அங்கீகரிக்கலாம்.இவ்வழக்கு தொடர்பாக ஏற்படும் இதர செலவினங்களை அனுமதிக்கலாம்.

இ5/14456/2009

**<u>தீர்மானம் எண்: 155</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

21. இம்மாநகராட்சி பகுதி வார்டு எண் 43 டுவிபுரம் 1ம் தெருவில் ராஜ் தியேட்டர் அருகில் அமைந்துள்ள மின்கம்பம் பொது மக்கள்மற்றும் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதால் அதனை அருகில் மாற்றி அமைப்பதற்கும் மின்சாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மேற்படி பகுதியில் அமைந்துள்ள மின் கம்பம் மாற்றியமைப்பதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ3/13971/2009

**<u>தீர்மானம் எண்: 156</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

22. இம்மாநகராட்சி வணிகவளாகத்தில் உள்ள கீழ்க்கண்ட கடைகளில் தற்போது நடத்தி வரும் அனுபோகம் இல்லாத உரிமதாரர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண் 92 நாள் 03/07/2007ன் படி 12மாத வாடகை பெயர் மாற்ற கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வைப்பு தொகை செலுத்தி உரிமம் தாரர் பெயர் பெயர் மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பித்துள்ள கீழ்க்கண்ட நபர்களின் மனு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | பழைய உரிமம்தாரரின் பெயர் | தற்போதைய உரிமம்தாரரின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|
| 1 | 113 | பழைய பேருந்து நிலையம்<br>சித்திக் ஜெயம்பு பீவி | திருமதி. ஜெயராணி, செந்தில்குமார்,<br>73ஜி.மீனாட்சிபுரம் 4ம் தெரு,<br>தூத்துக்குடி. |
| 2 | 80 | குருசாமி | ஜே.மதன்<br>106எச்/29 சின்னமணி நகர், தூத்துக்குடி |
| 3 | 49 | புதியபேருந்து நிலையம்<br>ஆர்.சுந்தர்ராஜ் | இ.எஸ். செபஸ்தியான்<br>126.கே.வி.கே.நகர் மேற்கு, தூத்துக்குடி |
| 4 | 71 | செந்தில்குமார் | எஸ்.செபஸ்தியான், 24/5பி அண்ணாநகர் 9ஆம் தெரு, தூத்துக்குடி. |
| 5 | 74 | செந்தில்குமார் | எஸ். சங்கரன்,<br>8. அண்ணாநகர் 6ஆம் தெரு,<br>தூத்துக்குடி |
| 6 | 35 | அண்ணாமலை | எஸ்.உமாமகேஸ்வரி<br>37 பாண்டுரங்கன் தெரு, தூத்துக்குடி. |
| 7 | 36 | கே.ஆர். டென்னிஸ்ராஜ் | எஸ். உமாமகேஸ்வரி<br>37 பாண்டுரங்கன் தெரு<br>தூத்துக்குடி. |

**அலுவலகக் குறிப்பு**

1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 92 நாள் 03/07/2007ன் படி பட்டியலில் கண்டுள்ள நபர்கள் 12 மாத வாடகை பெயர் மாற்ற கட்டணமும் 12 மாத வாடகை முன் வைப்பு தொகை செலுத்தியுள்ளதால் கலம் எண் 2ல் கண்டுள்ள கடைகளுக்கு கலம் 3ல் கண்டுள்ள பெயரில் இருந்து கலம் எண் 4ல் கண்டுள்ள பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) கலம் 2ல் கண்டுள்ள கடை வாடகை நிலுவைக்கு கலம் 3ல் கண்டுள்ள உரிமம்தாரர்கள் பெயரில் உள்ள காலம் கடந்த வைப்பு தொகையில் உள்ள முன்வைப்பு தொகையில் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/24404/2007

**<u>தீர்மானம் எண்: 157</u>**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது

23. தூத்துக்குடி மாநகராட்சி மாமன்ற உறுப்பினரின் 13–07–2009ம் தேதிய விண்ணப்பத்தில் 51வது வார்டு பாளையங்கோட்டை ரோடு மேற்கு (சின்னமணி நகர்) மற்றும் பாளையங்கோட்டை ரோடு மேற்கு (ஆசிரியர் காலனி தேவகி நகர்) பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள சமுதாய கூடம் மற்றும் திறந்தவெளி இடத்தினை மாநகராட்சி வசம் ஒப்படைக்க விருப்பம் தெரிவித்து அப்பகுதி மக்கள் ஒப்படைப்பு ஆவணம் சமர்ப்பித்து மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள்.

1) மேற்படி பாளையங்கோட்டை ரோடு மேற்கு (சின்னமணி நகர்) சர்வே எண். 494B/1A1A1A ல் L.D.DM.NO.P/T.19/66ல் செயலாளர், தூத்துக்குடி ஸ்பின்னிங் மில் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு (Thoothukudi Spining mill Co.Op.Building Society) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.. மேற்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பொது உபயோகமாக 50 சென்ட் இடம் சமுதாய கூடம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் கட்டிடம் ஏதுமில்லை. மேலும் மேற்படி இடம் சர்வே வார்டு சி பிளாக் 30 நகரளவு எண் 41 ஆனது நகரளவு ஆவணத்தின் படி காலியிடம் Community Centre பொது இடம் என உள்ளது.

மேற்படி பகுதிவாழ் மக்கள் மேற்படி இடத்தினை மாநகராட்சி வசம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்து ஒப்படைப்பு ஆவணம் சமர்ப்பித்துள்ளார்கள். எனவே மேற்படி இடத்தினை பூங்காவாக பராமரிக்க நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதல்பெறவும் தமிழ்நாடு பூங்கா விளையாட்டு மைதானம் மற்றும் திறந்த வெளிகள் பாதுகாத்தல் (ம) ஒழுங்குபடுத்துதல் சட்டம் 1959ன் படி அரசிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது

2) மேலும் தூத்துக்குடி மாநகராட்சி 51வது வார்டு பாளையங்கோட்டை ரோடு மேற்கு (ஆசிரியர் காலனி தேவகி நகர்) சர்வே எண். 724 பகுதி 725/2, 4, 5 மற்றும் 722/ 1எ, 3, 4இல் ம.பி. 5/ம (தி.க) எண் 71/86ல் மனைப்பிரிவு அங்கீகாரம் ஸ்பிக் தொழிலாளர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி மனைப்பிரிவில் பொது உபயோகமாக திறந்தவெளி இடம் 1437.45 சதுர மீட்டர் மற்றும் 244.00 சதுர மீட்டர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடங்கள் தற்போது திறவிடமாகத்தான் உள்ளது. மேற்படி திறவிடங்கள் அமையும் இடம் சர்வே வார்டு சி. பிளாக் 37 நகரளவு எண். 4/1எ 1எ பகுதியில் அமைகிறது. மேற்படி இடம் நகரளவு ஆவணத்தின்படி Remarks கலத்தில் முத்துசாமிபிள்ளை மற்றும் மோகன்தாஸ் என உள்ளது. மேற்படி மனைப்பிரிவு ஸ்பிக் தொழிலாளர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் ஒரு பகுதியான திறவிடம் 1437.45 சதுர மீட்டர் இடத்தினை மட்டும் மாநகராட்சி வசம் ஒப்படைக்க பகுதி வாழ்மக்கள் ஒப்படைப்பு ஆவணம் சமர்ப்பித்துள்ளார்கள். மேற்படி மனைப்பிரிவில் மற்றொரு பகுதி 244 சதுரமீட்டர் பரப்பளவில் திறவிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் (காலியாக) திறவிடமாகத்தான் உள்ளது. எனவே மேற்படி இடத்தினையும் சேர்த்து 41.50 சென்ட் இடத்தினை திறவிடமாக அறிவிப்பு செய்யலாம்.

எனவே மேற்படி மனைப்பிரிவிலுள்ள திறவிடங்களை மாநகராட்சி வசம் எடுத்து பராமரிக்கவும் தமிழ்நாடு பூங்கா விளையாட்டு மைதானம் மற்றும் திறந்த வெளிகள் பாதுகாத்தல் (ம) ஒழுங்குபடுத்துதல் சட்டம் 1959ன் படி அரசிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

3) தூத்துக்குடி மாநகராட்சி 42வது வார்டு மில்லர்புரம் மக்கள் நலச் சங்க தலைவரின் 14.7.09ம் தேதிய விண்ணப்பத்தில் மில்லர்புரம் மக்கள் நலச்சங்கத் தலைவர் மற்றும் பகுதிவாழ் மக்கள் சர்வே எண். 494/பி/1எ–இல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் T.P.H/ D.T.P. NO. 22/65இல் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை மாநகராட்சி வசம் ஒப்படைத்து பூங்காவாக மாற்றி தருமாறு ஒப்படைப்பு ஆவணம் சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்படி இடத்தில் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் சர்வே வார்டு சி பிளாக் 23 நகரளவு எண் 32ல் 685 சதுரமீட்டர் (17 சென்ட்) இடமானது பள்ளிக் கட்டிடம் மற்றும் விளையாடுமிடத்திற்கு ஒதுக்கப்பட்ட இடமாகும். நகரளவு ஆவணங்களில் மேற்படி இடம் விளையாட்டு அரங்கம் என உள்ளது.

மேலும் மனுதார்கள் கோரியபடி மேற்படி இடத்தில் பூங்கா அமைக்க இயலாது. விளையாட்டு மைதானமாக பயன்படுத்தலாம். எனவே மேற்படி இடத்தினை மாநகராட்சி வசம் எடுத்து விளையாட்டு மைதானமாக பராமரிக்கவும் தமிழ்நாடு பூங்கா விளையாட்டு மைதானம் மற்றும் திறந்தவெளிகள் பாதுகாத்தல் (ம) ஒழுங்குபடுத்துதல் சட்டம் 1959ன்படி அரசிதழில் பிரசுரம் செய்து நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மேற்கண்ட பொருள் வரிசை எண் 1,2,3இல் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை மாமன்றம் ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

எப்1/21134/04

**<u>தீர்மானம் எண்: 158</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

24. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரவர்களின் 6–7–2009ம் தேதிய ந.க.டி4/24813/08ம் எண் கடிதத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டு மனைப்பட்டா வழங்க ஆட்சேபனையில்லை என தீர்மானம் நிறைவேற்றித்தர கோரப்பட்டுள்ளது. அதன்படி தூத்துக்குடி வட்டம் தூத்துக்குடிபகுதி 2 கிராமம் தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு காட்டன் ரோடு வார்டு எண் 1 பிளாக் 9 நகரளவு எண். 1142 மற்றும் 1144 ஆகிய எண்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் 38 நபர்களது ஆக்கிரமிப்பினை வரன்முறை செய்து வீட்டுமனை பட்டா வழங்க கோட்டாட்சியர், தூத்துக்குடி அவர்கள் பரிந்துரை செய்துள்ளதால் மேற்படி இடத்திற்கு பட்டா வழங்க மாநகராட்சியின் தடையின்மை சான்று வழங்க கோரப்பட்டுள்ளது.

மேற்படி பிரஸ்தாப நிலம் நகரளவு ஆவணங்களின்படி காலம் (6) (7)இல் அரசுபுறம் போக்கு எனவும் கலம் (18)ல் ரோடு கலம் (19)ல் தெற்கு காட்டன் ரோடு எனவும் பதிவாகி உள்ளது. நகரளவு ஆவணங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இடங்கள் அரசு புறம்போக்கில் அமைந்துள்ள ரோடாகும். எனவே அரசாணையில் குறிப்பிட்டுள்ள அறிவுரைக்கிணங்கவும் தூத்துக்குடி கோட்டாட்சியர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளதற்கிணங்கவும் மேற் குறிப்பிட்டுள்ள இடத்தில் வீடுகள் கட்டி ஐந்து வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வரும் ஆக்கிரமிப்பு தாரர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க இம்மான்றத்திற்கு ஆட்சேபணையில்லை என தெரிவிக்கலாம்.

**அலுவலக குறிப்பு –** மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளின் படி ஆட்சேபணையில்லா சான்று வழங்க அனுமதிக்கலாம்.

ஜி1/9357/07

**<u>தீர்மானம் எண்: 159</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஆட்சேபனையில்லா சான்று வழங்க அனுமதிக்கப்பட்டது

25. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியான எஸ்.எஸ். மாணிக்கபுரம் கிழமேல் 60அடி சாலையில் புதிதாக தார்சாலை, மாநகராட்சி மூலம் அமைக்கவும் தற்போது மேற்படி சாலையில் தனியார் மூலமாக அழகு செடிகள், அலங்கார விளக்குகள் நீரூற்று ஆகியன அமைக்கவும் 11வது வார்டு மாமன்ற உறுப்பினர் அனுமதி கோரியுள்ளார். மேற்கண்டுள்ள சாலையில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை. எனவே அனுமதி அளிப்பது தொடர்பாக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ5/9206/09

**<u>தீர்மானம் எண்: 160</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

26. தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 51 , கதவு எண். 106ஜே/50 மில்லர்புரம், வரிவிதிப்பு எண். 510303ன் கட்டிட உரிமையாளர் திரு. எ. பாஸ்கர் வின்சென்ட் என்பவர் இம்மாநகராட்சிக்கு எதிராக தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.ஒ.எஸ். 278/05ல் மாநகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளபடியால் இவ்வழக்கு தொடர்பாக தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் உடனடியாக மேல்முறையீடு தாக்கல் செய்ய வேண்டியுள்ள நிலையில் மேற்படி வழக்கில் தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யவும், அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மேற்படி வழக்கில் மேல்முறையீடு செய்வதற்கான கால அவகாசமின்மையை கருத்தில் கொண்டு மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் மாமன்ற வழக்கறிஞர் மூலம் மேல்முறையீடு தாக்கல் செய்ததை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்படி மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்கறிஞர் கட்டணம் நீதிமன்ற கட்டணம் ரூ 12,905/—ம் மற்றும் கூடுதல் நீதிமன்ற கட்டணம் ரூ 1150/—ம் மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.அ8/13769/03

**<u>தீர்மானம் எண்: 161</u>**

அலுவலகக் குறிப்பு1 அங்கீகரிக்கப்பட்டது, அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது

27. இம்மாநகராட்சிப் பகுதி கடற்கரை சாலையில் தற்போது உள்ள துறைமுகம் எல்கை ஆரம்பத்தில் இருந்து மாநகராட்சி எல்கைக்குள் அமையப்பெற்ற பெல் ஹோட்டல் வரை தூத்தக்குடி துறைமுகப் பொறுப்பு கழகத்தின் சொந்த செலவில் ரூ 19.63 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள், பாதசாரிகள் மற்றும் துறைமுக ஊழியர்கள் துறைமுகவர்த்தகர்கள் ஊழியர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் புதியதாக 40 அடி உயரத்தில் மின்கம்பங்கள் அமைத்து 400 வால்ட் மின் விளக்குகள்பொருத்தி அதனை மாநகராட்சி மூலம் பராமரிப்பு செய்திடவும் அதற்கான மாதாந்திர மின்கட்டணம் செலுத்திடவும் கேட்டுள்ளார்கள்.

எனவே மேற்படி தெரு மின் விளக்குளை மாநகராட்சி மூலம் பராமரிப்பு செய்திடவும், மாநகராட்சி பொறுப்பில் எடுத்து கொள்ளவும் அதற்குரிய மாதாந்திர மின் கட்டணத்தை மாநகராட்சியால் தொடர்ந்து செலுத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அனுமதிக்கப்பட்ட விபரப்படி மேற்படி மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள 400 வால்ட் மின் விளக்குக்கு பதிலாக 250 வால்ட் மின் விளக்குகள் மாற்றி அமைத்து பின்பு மாநகராட்சி பொறுப்பில் எடுத்து கொள்ளலாம்.
2) மேற்படி தெரு மின் விளக்குகுளை மாநகராட்சி மூலம் பராமரிப்பு செய்திடவும் அதற்குரிய மாதாந்திர மின் கட்டணத்தை தொடர்ந்து மாநகராட்சியால் செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ3/12797/2009

**<u>தீர்மானம் எண்: 162</u>**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது

28. இம்மாநகராட்சிப்பகுதியில் உள்ள 51 வார்டுகளில் 20 வார்டுகள், 5 வார்டுகள் வீதம் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண் 186 நாள் 21—03—2007ன் படி மூன்று வருடங்களுக்கு தனியார் மூலம் குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்தக்காரர்கள் நியமனம் செய்யவும், ஒவ்வொரு வருடமும் அவர்களின் பணிதிறன் அடிப்படையில் மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தத்தை

புதுப்பித்துக்கொள்ளவும் அனுமதி வழங்கியுள்ளது. மன்றதீர்மான எண். 38 நாள் 29–08–2008ன் படி கீழ்க்கண்ட ஒப்பந்தக்காரர்களுக்கு 16–07–2008 முதல் ஒவ்வொரு வருடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 15–07–2009ம் தேதியுடன் ஒருவருட பணி நிறைவு பெற்றதால் தொடர்ந்து இப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்க்கண்ட ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தத்தை அதே ஒப்பந்த புள்ளி அடிப்படையில் மேலும் ஒரு வருடத்திற்கு 16–07–2009 முதல் 15–07–2010 வரை கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதித்து உத்தரவு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நிபந்தனை**

ஒரு மண்டலத்திற்கு ஒதுக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களை வேறு மண்டல துப்புரவு பணிக்கு பய்னபடுத்தக்கூடாது. அந்தந்த மண்டலத்தில் தனித்தனியே துப்புரவு பணியாளர்களின் வருகைப்பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

1, மண்டலம் 1 (வார்டுகள் 10, 11,12, 13 மற்றும் 14)
திருமதி எஸ்.கே. செல்வி. 73/9/இ/3 போல்பேட்டை, தூத்துக்குடி
ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 641/– (ரூபாய் அறுநூற்றி நாற்பத்தி ஒன்று மட்டும்)

2. மண்டலம் 2 (வார்டுகள் 46, 47, 48, 49 மற்றும் 50)
திருமதி ஏ. விக்டோரியா, 122 எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி
ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 706/– (ரூபாய் எழுநூற்றி ஆறு மட்டும்)

3. மண்டலம் 3 (வார்டுகள் 19, 20, 29, 30 மற்றும் 31)
திருமதி. ஏ. விக்டோரியா, 122 எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி.
ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 694/– (ரூபாய் அறுநூற்றி தொன்னூற்று நான்கு மட்டும்)

4. மண்டலம் 4 (வார்டுகள் 41, 42, 44, 45 மற்றும் 51)
திருமதி எஸ்.கே. செல்வி 73/9/இ/3 போல்பேட்டை, தூத்துக்குடி
ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 694/– (ரூபாய் அறுநூற்றி தொன்னூற்றி நான்கு மட்டும்)

**அலுவலகக் குறிப்பு** – மேலும் ஒரு வருடத்திற்கு 16–07–2009 முதல் 15–07–2010 வரை நீட்டித்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

எச்1. 254/2007

**தீர்மானம் எண்: 163**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

29. இம்மாநகராட்சி சொத்துவரி, தண்ணீர் கட்டணம், தொழில் வரி ஆகிய இனங்களுக்கான கேட்பு பாஸ்புத்தகங்கள் அச்சிட்டு பெற அதற்கான உத்தேச செலவினம் ரூ 8,00,000/– (எட்டு லட்சம் மட்டும்) க்கு மாமன்ற தீர்மான எண் 55 நாள் 26.2.2009ல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட புத்தகங்கள் தூத்துக்குடி மாவட்ட ஹைடெக் பிரிண்டிங் கூட்டுறவு அச்சகம், கோவில்பட்டியில் அச்சடித்து பெறப்பட்டதில் அதற்கான செலவுத்தொகை ரூ 8,00,000/– மற்றும் கூடுதல் மதிப்பு வரி (VAT) 4 சதவீதம் ரூ 32,000/- சேர்த்து மொத்தம் ரூ. 8,32,000/– ஆகிறது.

எனவே ஏற்கனவே மாமன்ற அனுமதி பெறப்பட்ட ரூ 800000/– போக கூடுதல் மதிப்பு வரி (VAT) ரூ.32000/– கூடுதல் செலவினத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – கூடுதல் மதிப்பு வரி (VAT) ரூ.32000/– செலுத்தவேண்டியது அவசியமாதலால் மேற்படி கூடுதல் செலவினம் ரூ 32000/–க்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

அ 1/6775/09

**தீர்மானம் எண்: 164**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

30. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட ஜார்ஜ் ரோடு பாத்திமா நகர்க்கு செல்லும் ஜார்ஜ் ரோடு தொடர்ச்சியில் வார்டு 2 பிளாக் 9 நகரளவு எண். 330/34, 330/1எ24எ யில் பாத்திமா நகர் பங்கு மக்கள் தங்களது சொந்த செலவில் வெள்ளி விழா நினைவு வளைவு அமைக்க 35வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது, மேற்படி இடம் நகரளவை ஆவணங்களில் தெருவாக உள்ளது.மேற்படி இடத்தில் நினைவு வளைவு அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு –** மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் தடையின்மைச்சான்று பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அரசின் அனுமதிபெற்று அமைத்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

எப்1.14304/09

**<u>தீர்மானம் எண்: 165</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

மாமன்றம், தூத்துக்குடி
நாள் 25–08–2009

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி